நடராஜப் பத்து

(முதலியன)

28 MAY 1924

மானேஜர்:

லக்ஷ்மி ஆபீஸ்,

தபால் பெட்டி 99,

சென்னை.

Copy Right]

குஞ்சம் கட்டின
பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பலவித மேகவர்ணக் கலர்கள். வெள்ளை, நீலம், சந்தன கலர் முதலிய பல கலர்கள்.

5 மு x 40 1-க்கு ரூ. **12, 14, 16, 18.**

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. **16** முதல் **20** வரை.

இமிட்டேஷன் ஸில்க்
புடவைகள்

இந்தப் புடவைகளை பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர்:—அரக்கு, மஞ்சள், கறுப்பு, நீலம் முதலியன.

18 மு x $2\frac{1}{2}$ அகலம் புடவை 1-க்கு ரூ. **15, 18, 20.**

வலைப் பனியன்

போத்தானில்லாதது; நைஸானது.

பனியன் 1-க்கு ரூ. **1, 1-4, 1-8.**

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

...ாய்க்கன் தெருவு,

சென்...

நடராஜப் பத்து

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறைநான்கின் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டலம் இரண்டேழும் நீ
பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க் குயிரும் நீ
பிறவி நீ ஒருவன் நீயே
பேதாதி பேதம் நீ பாதாதி கேசம் நீ
பெற்ற தாய் தந்தை நீயே
பொன்னும் நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும் நீ
போதிக்க வந்தகுரு நீ
புகழொணுக் கிரகங்கள் ஒன்பதும் நீ இந்த
புவனங்கள் பெற்றவனும் நீ
எண்ணரிய ஜீவகோடிகள் ஈன்ற அப்பனே
என்குறைகள் ஆர்க்குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே. (1)

மான் ஆட மழு ஆட மதி ஆட புனல் ஆட
மங்கைசிவ காமி ஆட
மால் ஆட நூல் ஆட மறை ஆட திரை ஆட
மறை தந்த பிரமன் ஆட
கோன் ஆட வானுலகு கூட்ட மெல்லாம் ஆட
குஞ்சர முகத்தன் ஆட
குண்டலம் இரண்டாட தண்டை புலி உடை ஆட
குழந்தை முருகேசன் ஆட

18837
சென்னை-600 008

ஞான சம்பந்தருடன் இந்த்ரர் பதினெட்டுமுனி
அட்ட பாலகரும் ஆட
நரை தும்பை அறுகாட நந்தி வாகனம் ஆட
நாட்டியப் பெண்கள் ஆட
வினைஓட உனைப்பாட எனைநாடி இதுவேளை
விருதோடே ஆடிவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே. (2)

கடல் என்ற புவிமீதில் அலை என்ற உருகொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூஆசை மாருதச் சுழலிலே
சுட்டுண்டு நித்தம் நித்தம்
உடல் என்ற கும்பிக்கு உணவென்ற இரை தேடி
ஓயாமல் இரவு பகலும்
உண்டுண்டுறங்குவது கண்டதே அல்லாது
ஒரு பயன் அடைந்திலேனை
தடம் என்ற இடி கரையில் பந்த பாசங்கள்எனும்
தாபரம் பின்னல் இட்டு
தாய் என்று சேய் என்று நீ என்று நான் என்று
தமியேனை இவ்வண்ண மாய்
இடை என்று கடைநின்று ஏனென்று
கேளா திருப்பதுன் அழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே. (3)

பம்பு சூனியம்அல்ல வைப்பல்ல மாரணம்
தம்பனம் வசியம் அல்ல
பாதாள வஞ்சனம் பரகாய பிரவேசம்
அதுவல்ல ஜாலம் அல்ல
அம்புகுண்டுகள் விலக மொழியு மந்திரம்அல்ல
ஆகாய குளிகைஅல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகள்அல்ல
அரியமோ கனமும் அல்ல
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்மரிஷி
கூறிடும் வைத்யம் அல்ல
என் மனது உன்னடியை நீங்காது நிலைநிற்க
ஏதுளவு புகல வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே. (4)

நொந்து வந்தேனென்று ஆயிரம் சொல்லியும்
செவி யென்ன மந்தமுண்டோ
நுட்பநெறி அறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தை உண்டோ
சந்ததம் தஞ்சமென் றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்சம் உண்டோ
தந்திமுகன் அறுமுகன் இருபிள்ளை இல்லையோ
தந்தைநீ மலடு தானோ
விந்தையும் ஜாலமும் உன்னிடம் இருக்குதே
வினைஒன்றும் அறிகி லேனே
வேதமும் சாஸ்த்ரமும் உன்னையே புகழுதே
வேடிக்கைஇது அல்லவோ

இந்தஉலகிரேழும் எனளித்தாய் சொல்லு
இனிஉன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே எனைஈன்ற
தில்லைவாழ் நடராஜனே. (5)

வழிகண்டு உன்னடியை துதியாத போதிலும்
வாஞ்சை இல்லாத போதும்
வாலாயமாய்க் கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சமே செய்த போதும்
மொழிஎதுகை மோனைகள் இல்லாது பாடினும்
மூர்க்கனேன் மூரட னேனும்
மோசமே செய்யினும் தேசமே கவரினும்
மூழுகாமியே யாயினும்
பழியெனக் கல்லவே தந்தைதாய்க் கல்லவோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பார்அறிய மனைவிக்கு பாதியுடல் ஈன்றநீ
பாலனைக் காக்கொணாதோ
எழில்பெரிய அண்டங்கள் அடுக்காய் அமைத்தநீ
என்குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே. (6)

அன்னை தந்தைகள் என்னை ஈன்றதற் கழுவனோ
அறிவிலாதற் கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக் கழுவனோ
முன்பிறப் பென்வினை செய்தனென் றழுவனோ
மூட அறிவுக் கழுவனோ

முன்னிலென் வினைவந்து மூளுமென் றழுவனே
முத்திவரு மென்றுணர்வ னே
தன்னைநொந் தழுவனே உன்னைநொந் தழுவனே
தரித்திர திசைக் கழுவனே
இன்னும் எப்பிறவிதான் வருமென் றழுவனே
எல்லாம் உரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. (7)

காயாமுன் மரமீது பூம்பிஞ் சறுத்தனே
கன்னியர்கள் பழி கொண்டனே
கடனென்று பொருள்பறித் தேஉடல் வளர்த்தனே
கடை வழியில் முள்ளிட்டனே
தாயாருடன்பிறவிக் கென்னவினை செய்தேனே
தந்தபொருள் இலையென்றேனே
தானென்று தெரிவித்து கொலைகளவு செய்தேனே
தவசிகளை ஏசினேனே
வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனே
வாணரைப் பழித்திட்டனே
வடிவுபோலே பிறரைச் சேர்க்கா தடித்தேனே
வந்தபின் என்செய்தேனே
ஈயாத லோபி என்றே பெயர் எடுத்தேனே
எல்லாம் பொறுத்தருளு வாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே. (8)

தாயார் இருந்தென்ன தந்தையும் இருந்தென்ன
தன்பிறவி உறவு தேடி
தனமலை குவித்தென்ன தனபெய ரெடுத்தென்ன
தாரணியை ஆண்டும் என்ன
சேயர்கள் இருந்தென்ன குருவாய்த் திரிந்தென்ன
சீஷர்கள் இருந்தும் என்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகள் எல்லாம்
ஓயாது மூழ்கினும் என்னபலன் எமன்விடும்
ஓலை ஒன்றைத் தடுக்க
உதவுமோ இவையெலாம் சந்தை உற
வென்றுதான் உன் இருபதம்பிடித் தேன்
யார் மீது உன்மனம் இருந்தாலும் என் மீது
அன்புவைத்தருள் புரிகுவீர்
ஐயனே சிவகாமி நேசனே அருளீன்ற
தில்லைவாழ் நட ராஜனே. (9)

இன்னமும் சொல்லவோ உன்மனம் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இருசெவியும் மந்தமோ ஏழைசொல்
அம்பலம் ஏறாதோ இதுவும் அழகோ
என் அன்னை மோகமோ இது இந்த்ர ஜாலமோ
இதுவு மொரு விளையாடலோ
இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
என்றாலும் நான் விடுவெனோ

உன்னைவிட் டெங்கு சென்றாலும் விழலாவனன்
உனை அடுத்துங் கெடுவெனோ
ஓகோ இதன்குற்றம் என்குற்ற மன்றுநீ
உற்றுபார் பெற்ற ஐயா
என்குற்றம் ஆயினும் உன்குற்றம் ஆயினும்
இனி அருள் அளிக்க இசைவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனைஈன்ற
தில்லைவாழ் நடராஜனே. (10)

சனிராகு கேதுபுதன் சுக்ரன் செவ்வாய்குரு
சந்திரன் சூர்யன் இவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசிபனி ரெண்டையும்
சமமாய் நிறுத்தி உடனே
பனியொத்த நட்சத்தி ரங்கள் இருபத்தேழும்
பக்குவப் படுத்தி யின்னும்
பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும்
வெட்டிப் பலரையும் அதட்டியென்முன்
கனிபோலவே பேசி கெடுகள் நினைக்கின்ற
கசடர்தனை யும் கலக்கி
கர்த்த நின் தொண்டராம் தொண்டர்க்குத்
தொண்டராம் தொண்டர்கள் தொழும்பனாக்கி
இனியவளம் மருவுசிறு மணவைமுனி சாமியெனை
ஆள்வதினி உன்கடன்காண்
ஈசனே சிவகாமி நேசனே எனைஈன்ற
தில்லைவாழ் நடராஜனே. (11)

நடராஜர் பதிகப் பஞ்சகம்.

வசியசிவ சங்கரா வசியகெங் காதரா வசிய
கயிலாச வாசா
வசியமணி அணிசிரா வசியமான் மழுகரா
வசியசிவ காமி நேசா
வசியதிரி நேத்திரா வசியபுவ னேச்வரா
வசியஓம் நடன பாதா
வசிய கரி யுரி அழக வசியபுலி இடைஅழக
வசிய சிர மாலை அழகா
வசியமதி முடிஅழக வசியபசு பதிஅழக
வசியஎன் மனதில் வாவா
வசியமுந் நூல்அழக வசியவெண் நீறழக
வசிய மறை பரவும் அழகா
வசியஎன உனைநிதம் வாழ்த்தும் அடி யார்க்கெலாம்
அருள் மடை திறந்ததில்லை
அதிபதி ஜெனகாதி துதிபதி சிவகாமி
அன்பில் உறை நடனபதியே. (1)

சிவயநம என்றுதினம் மூழ்கியுரு வேற்றுவார்
செய்தொழி லெலாம் வசியமாம்
ஜெகவசிய மாம் சகல முக வசிய மாம் செய்ய
சித்திக ளெலாம் வசியமாம்
வயநமசி என்றஉரு மாட்டுவார் சத்ராதி
தாருடை விட்ட பந்தாய்
வணங்காத பூதபேதம் பசா சிவையெலாம்
வளர்குலாலன் திகிரியாம்

யநமசிவ வயநமசி சிவயநம மசியவந
எல்லாம் உன் நடனம் அன்றோ
இவ்வுலக பொருளுதவி அவ்வுலக அருளுதவி
ஈய இரு தெய்வ முளதோ
அவுணாதி புவனாதி தென்னாதி மூத்தார்க்கும்
அருள் மடை திறந்ததில்லை
அதிபதி ஜெனகாதி துதிபதி சிவகாமி
அன்பில்உறை நடனபதியே. (2)

புல்லாய்ப் பிறந்தாலும் மிருகாதி ஜெனனங்கள்
பசியாறி மகிழு மன்றோ
பூண்டாய்ப் பிறந்தாலும் புலத்தியர்கள் கொண்டுசில
பிணிதீர்த்துப் புகழ்வரன்றோ
கல்லாய்ப் பிறந்தாலும் நல்லவர்கள் மிதிகொண்டு
கதிபெறவு மாகு மன்றோ
கழுதையுரு வந்தாலும் ஆ எனக்கத்தினால்
கைகண்ட சகுனம் என்பார்
எல்லாம் இலாமலே இப்பிறவி தந்தென்னை
எங்கவிட் டகல நின்றாய்
எத்தனை அன்னையினும் எத்தனை தந்தையினும்
எத்தனை பிறவி வருமோ
அல்லெனும் மாசறுத் தாட்கொளும் தெய்வமே
அப்பனே தில்லைநகர்வாழ்
அதிபதி ஜெனகாதி துதிபதி சிவகாமி
அன்பில் உறை நடன பதியே. (3)

கல்லாத மூடரைக் கயவரைக் காமுகரை
கல்நெஞ்ச வஞ்ச ரிவரை
கற்றும் அறிவில்லாத மோழையைப் பசித்தவர்
காக்கவைத் துண்டபேரை

பொல்லாத மூர்க்கரை மிருகங்கள் போன்றவரை
பொய்க்கும் அஞ்சாத பேரை
பூமியில் பிறருக் கிடுக்கண் முயல்வோர்களைப்
பிணமொத்த பேரை யெல்லாம்
நல்லார் எனக்கவிகள் சொல்லி அலையாமல் நான்
நன்றுவ தென்று சிவமே
நானன்றி நீயேது நீயன்றி நானேது நானும்
உரைத்த தேது
அல்லிலும் பகலிலும் நீயிலா தசைவேது
அருள்மடை திறந்த தில்லை
அதிபதி ஜெனகாதி துதிபதி சிவகாமி அன்பில்
உறை நடனபதியே. (4)

ஜெகம்எட்டு திசைகளும் கிரிகள்பல தெய்வமும்
செம்பொன்மணி மாட மேடை
சேய் அன்னை தந்தையும் நான் என்ற
ஆணவம் செல்வமும் வல்ல சித்தும்
முகடேறும் எமனுக்கு முன்வந்து காக்குமோ
முத்திக்கு வித்து முளதோ
மூவாசை விட்டுகனி சருகாதி தின்றாலும்
முன்செய்த வினை அகலுமோ
இகமருவு சுகபோகம் நின்னருளலால் ஏது
இகமேது பரமேது காண்
ஈசநீ காணாத இருளேது வெளியேது
நினவேது கனவு மேது
அகவுறவு பழுதற்று துறவுறவு முற்றுற்று
ஆரியர்கள் பரவு தில்லை
அதிபதி ஜெனகாதி துதிபதி சிவகாமி
அன்பில் உறை நடனபதியே. (5)

தில்லை நடராஜர் பதிகம்

காப்பு.

சீர்கமலத் தேன்பொழியும் தில்லைநட ராஜர்தம்மேல்
சீர்புகழும் செந்தமிழைப் பாடுதற்கு—தார்புனையும்
ஷண்முகர்க்கு முன்னாகும் தந்திமுகத் தெந்தைபதம்
வண்மைபெற வாழ்த்துக என் வாய்.

அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

பூரண மிகும்கிரண பரிதியென ஒளிபரவு
பொன்மகுட முடியினழகும் [குழையும்
புகல் அரிய இருசெவியில் நவமணிகள் திகழ்
பொற்கண்ட சரம தழகும்
காரணமதாகவரு சிருஷ்டியைக் காக்கும் உன்
கருணைகடை விழியி னழகும்
கஸ்தூரி திலகமும் வெண்ணீறும் முன்னிய
கமலவத னத்தின் அழகும்
வாரணம துரியாடை திருமேனி போர்வையும்
வச்ரமணி பாத குறடும்
வரிசை பெற பவனிவர கொலு சிலம்பதிர வெகு
வடிவுள்ள நடையின் அழகும்
ஆரண முதற்பொருள் ஆய்நின்ற உன்பெருமை
அடியனால் பகர எளிதோ
அன்பருள வாசனே உம்பர் பணி நேசனே
ஆநந்த நடராஜனே. (1)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
188837
சென்னை 600 008

விண்டலத்தோர் கூட வேத கீதம்பாட
விரித்த செஞ்சடையு மாட
விடையாட இடையாட கையில் கங்கணமாட
விரிசூல கரமு மாட
கண்டமதில் ருத்ராக்ஷ தாழ்வடம் நனியாட
கங்கையணி வேணி யாட
கந்தமிகு மல்லிகை மலரா விரிமார்பில்
கனகமணி ஊச லாட
வெண்டரள மணியாட வேதவேதிய ராட
விரலறியும் அயனு மாட
மேனகை அரம்பையொடு ஊர்வசி திலோத்தமை
வெண்சா மரங்க ளாட
அண்டர் தொழ நின்றாடும் முண்டகப் பாதனே
அடியனேற் கருள வருவாய்
அன்பருள வாசனே உம்பர்பணி ஈசனே
ஆநந்த நடராஜனே. (2)

சிவசிவா என்றநின் திருநாம மந்திரம்
சிந்தைதனில் என்று மறியேன்
சிற்பரா பரமான தற்பரா யோகசுக
சிவநிஷ்டை யேது மறியேன்
தவமோங்கு பத்தரின் தரிசனம் கண்டிலேன்
சாற்குணர்கள் உறவு மறியேன்
தலமதாய் மகிமையுறு சன்னதி தனிற் சென்று
சரணங்கள் செய்து மறியேன்

குவலயம் தன்னில்வளர் மானிடப் பிறவிதனில்
கொடிய ஞாகிய நாயினேன்
கொலைகளவு கள்காமம் இவையெலாம்
நிறைபெருக குடிகொண்ட வம்பனேனை
அவசியம் உமதுதிரு கண்பார்த்து
ரட்சியும் அண்ணலே அமுத வடிவே
அன்பருள வாசனே உம்பர்பணி ஈசனே
ஆநந்த நடராஜனே. (3)

தீதுநல மிதுவென்று சிந்தையுள் ளுணராத
சீரிலா நண்பர் உறவும்
தீயோர்கள் தரிசனமும் அ்யமற வேவிட்ட்
ஜெக மாய்கை மூழ்கி யானும்
கோதிலா ஆகம புராணநெறி அறியாத
குருடனா யநேக விதமாய்
குற்றங்கள் எத்தனை செய்திருந் தாலுமுன்
குழந்தையென் றெண்ணுமலென்
மீதுமன வர்மங்கள் வைத்திருந் தாலிந்த
மேதினியில் புகழ தாமோ
வேண்டா மிவ்வேளைதனில் ஆண்டவா
வேண்டினேன் வினையகல வேணுமையா
ஆதாவு நினைவிடத் திக்கெனக் ககிலமதில்
ஆருளர் அமலநாதா
அன்பருள வாசனே உம்பர்பணி ஈசனே
ஆநந்த நடராஜனே. (4)

மாயா விகாரமது ஓயாம லோங்கி வளர்
மானிலந் தன்னி லடியேன்
மாவினைகள் வேரூன்றும் பாவங்கள் வெகு கோடி
மதியாது செய்தனன் யான்
பேயாய்த் திரிந்து நின் திருவடியை விட்டிந்த
பேருலக வாசை தொட்டு
பித்தனாய நேகவகை குற்றங்கள் செய்துவரு
பிழை யெலா மகற்றிடாமல்
சேயனும் என்மீது வர்மமது தான் வைக்கின்
சிறுவனேன் சகிக்க வசமோ
தேசமெல்லாம் புகழும் மாசற்ற ரூபனே
தேஜோம யா நந்தனே
ஆயுமப்புகழ்தில்லை யம்பலத் தரசனே
அடிநடுவு முடிவானவா
அன்பருள வாசனே உம்பர்பணி ஈசனே
ஆநந்த நடராஜனே. (5)

சஞ்சல மிகுந்துரவு பாழ்படுங் குழியதாம்
தையலர்கள் யோனி அழலில்
தள்ளுண்டு மூன்றுமே தயங்கிமிக வாடிடும்
தமியனேன் ஆதலா லென்
வஞ்சமுறு மனதிருளை மாற்றுவனு பானமென
மாமகிமை யுற்ற உனது
மணிமந்த்ர வாளினல் வசைகளை அறுத்தெனது
வல்வினையை நீக்கி அருள்வாய்

கஞ்சமலர் அடி தனை எந்நாளும் அர்ச்சிக்க
கருணை தர இது தருணமே
கால காலா கண்ட நீலகண்டா சிவா
கங்காதரக் கடவுளே
அஞ்ச லென்றுன்பதம் நம்பினேன் எப்பொழுதும்
அடியேனை ஆள வருவாய்
அன்பருள வாசனே உம்பர்பணி நேசனே
ஆநந்த நடராஜனே. (6)

பெருகுந்தீ யெழுகுழி யெனவுருகு செல்வமும்
பெருமை பெறும் அகமும் மிக்க
பெற்றதாய் தந்தையர்கள் பெண்டிரும்
மக்களும் பேருறவு சுற்றங்களும்
கருதரிய நிறைகளும் இதுவெலாம் கனவினில்
கண்டிடும் காட்சி அன்றோ
காயநிலை என்றிடவும் எண்ணு தரைக்கணம்
கருதிடவு மெய்யல்லவே
மருவு மல்லிகை முல்லை செண்பக மலர்புனையும்
மங்கை மகிழ் கின்ற நேயா
மாறு பவபிணியில் தீராத கவலையுறும்
வாதனையை மாற்றி அருள்வாய்
அறுகுடன் கொன்றையும் தும்பை மலர்
அணிகின்ற அமலனே என்னை ஆளும்
அன்பருள வாசனே உம்பர்பணி ஈசனே
ஆநந்த நடராஜனே. (7)

பொங்குமத யானையால் இடருற்ற அன்பரைப்
புகழ்பெறப் பாது காத்தீர்

பூவுலகில் நின்னன்பர் எவர்களையும் முன்னாளில்
பொருந்தவே காக்கவில்லையா

அங்கஜன் கணைதொட நுதல்விழி திறந்தெரித்
தவர்க்கருள் புரிய வில்லையா

அந்தமுப் புரமெரிய நகைசெய்ய அண்டமொடு
ஆழிகளும் அதிர வில்லையா

பங்கம்நா னடையாமல் இங்கனம் வந்தெனைப்
பாலிப்ப தென்ன மலையா

பாரா திருப்பதுவும் யார்செய்த போதனையோ
பாலனுக் கருளும் ஐயா

ஐங்கரனும் அறுமுகனும் செங்கனிக் காகவலம்
அருகில்வரு பரமசிவனே

அன்பருள வாசனே உம்பர் பணி ஈசனே
ஆநந்த நடராஜனே.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186337
சென்னை-600 008

VEST & CO., MOUNT ROAD, MADRAS.

கலியாண காலம் - - வந்து விட்டது.

பட்டுத் திணுசுகளுக்குத்

தேவை யுண்டாகும் போது

காசி

கே. எஸ். முத்தையா

கம்பெனியார் பெயரை

மறந்து விடாதீர்கள்.

பட்டு வர்த்தகத்தில்

25 வருஷ அநுபவம் உடையவர்கள்.

சொற்ப விலைக்கு நயமான சரக்கு

சப்ளை செய்வதில் பெயர் பெற்றவர்கள்.

நமது நாட்டின் தற்கால வறுமையும்,
சிறுமையும் நீங்கிப் பெருமை அடையுமாறு,
நாடெங்கும் லக்ஷ்மியைப் பூஜை செய்யுங்கள். எங்கள்

"லக்ஷ்மி"

என்ற மாதப் பத்திரிகையை எல்லோரும் ஆதரியுங்கள்.

எங்கள் "லக்ஷ்மி" சித்திரப் படங்களுடன் கூடிய பத்திரிகை.

சிறந்த தமிழ் அறிஞர்கள் 'லக்ஷ்மி'யில் வியாசங்கள் எழுதுகிறார்கள்.

எல்லோரும் விரும்பும் பல நல் விஷயங்கள் லக்ஷ்மியில் வெளி வருகின்றன.

உங்கள் வீட்டிற்கு நமது லக்ஷ்மியை வரவழையுங்கள்.

உங்கள் வீட்டில் எல்லோரும் லக்ஷ்மியை விரும்புவார்கள்.

லக்ஷ்மி உங்களைத் தேடி வருகின்றாள்.
அவளை அன்புடன் எதிர்கொண்டழையுங்கள்.

மாதிரிப் பிரதி இரண்டணா. மாதிரிப் பிரதியைப் பார்வையிட்ட பின் நீங்கள் சந்தாதாரராவது நிச்சயம்.

உங்களுக்கு லக்ஷ்மி கடாக்ஷம் உண்டாவதாக!

வருட சந்தா உள் நாடு	ரூ.	2	0	0
வெளி நாட்டிற்கு	,,	2	8	0

விலாசம் :—

மானேஜர்,
"லக்ஷ்மி" ஆபீஸ்,
தபால் பெட்டி 99, மதராஸ்.

PRINTED AT VEST & CO., MOUNT ROAD, MADRAS.